புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுர் ஆண்டு 2056 • மார்ச் 20, 2025 • புரட்சி 25 • முழக்கம் 10 • விலை ரூ.3.00




## பெரியாரின் பெரும் தொண்டுகள் மக்களிடையே விளக்கம்! இளைஞர்கள் பெண்கள் பேராதரவு...

# பரப்புரைப் பயணங்கள் தொடங்கின

*பெரியார் ஏன் எதிரிகளைப் பதறவைக்கிறார்? பரப்புரைப் பயணம் கடந்த 15-ஆம் தேதி சென்னையில் தொடங்கியது 16-ஆம் தேதி ஈரோடு, சேலம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் தொடங்கியது.*

*கழக செயல் வீரர்கள் தனி வாகனங்களில் பயணத்தில் பங்கேற்கிறார்கள். கடும் வெயிலையும் பொருட்படுத்தாது கழக செயல் வீரர்கள் ஒவ்வொரு நாளும் குறைந்தது 4 கூட்டங்களை நடத்தி வருகிறார்கள். இந்த பரப்புரையில் இளைஞர்களும் பெண்களும் ஆர்வத்துடன் பங்கேற்கிறார்கள். கழக நூல்களை ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர். பெரியாரின் எதிர்நீச்சல் அவர் உருவாக்கிய சமூக மாற்றங்களைக் கழகப் பேச்சாளர்கள் மக்களிடம் எடுத்துக் கூறுகிறார்கள். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன.*

## பயணங்களின் செய்தித் தொகுப்பு

**சென்னை: "பெரியார் ஏன் எதிரிகளை பதற வைக்கிறார்?"** எனும் தலைப்பில் சென்னை அணி செல்லும் பரப்புரைப் பயணத்தின் தொடக்க விழா, இராயப்பேட்டையில் 15.03.2025 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை ராசேந்திரன் சிறப்புரையாற்றி பரப்புரைப் பயணத்தை துவக்கி வைத்தார். திமுக மாவட்ட துணைச்செயலாளர் ஆர். என்.துரை, 119-வது வட்ட மாமன்ற உறுப்பினர் கமலா செழியன் ஆகியோர் பங்கேற்று வாழ்த்தினர்.

முதல் நாள் தரமணி பேருந்து நிலையம், வேளச்சேரி காந்தி சாலை, பள்ளிக்கரணை போலீஸ் பூத், நன்மங்கலம் ஏழுமலை தெரு ஆகிய நான்கு இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. கருத்துரையாற்றிய தோழர்கள்: தபசி குமரன், இரா உமாபதி, சேத்துப்பட்டு இராசேந்திரன், பேராசிரியர் மணி கோ பன்னீர்செல்வம், திருப்பூர் மகிழவன், பேரன்பு, வழக்கறிஞர் ஆதன், முனி ஆறுமுகம் ஆகியோர்.

பொன்ராஜ் - வீரமணி கலைகுழுவினரின் நிகழ்ச்சியோடு, அருள்தாஸ் - பேரன்பு ஆகிய கழகத் தோழர்கள் பாடல்களையும் பாடினர். திமுக தோழர் வேளச்சேரி மணிமாறன் மதிய உணவை ஏற்பாடு செய்திருந்தார். மற்ற கழகத்தோழர்கள் களப்பணியாற்றினர். பாவலரேறு தமிழ்களம் (மேடவாக்கம்) - தமிழக மக்கள் முன்னணி ஒருங்கிணைப்பாளர் பொழிலன் இரவு தங்குவதற்கான ஏற்பாடுகளை செய்தார்.

16/3/25:கிழக்கு தாம்பரம் வால்மீகி தெரு, மேற்கு தாம்பரம் சண்முகம் சாலை, வண்டலூர் மாணிக்க ஜலகண்ட தெரு சந்திப்பு, ஊரப்பாக்கம் தேநீர் கடை சந்திப்பு ஆகிய நான்கு இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

கருத்துரையாற்றிய தோழர்கள்: அன்பு தனசேகர், இரா உமாபதி, திருப்பூர் மகிழவன், பேரன்பு, அப்துல் காதர் (மமக) ஆகியோர். பொன்ராஜ் - வீரமணி கலைக்குழுவினரின் நிகழ்ச்சி நடைபெற்றது. பேரன்பு பாடல்களை பாடினார். துரை மணிவண்ணன் மதிமுக பெருங்களத்தூர் பகுதிச் செயலாளர், ம.யாக்கூப் மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொதுச் செயலாளர் அமீன் (தமுமுக) ஆகியோர் உணவு ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**இந்த பரப்புரை பயணத்தின் நோக்கத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல சொந்தமாக பிரச்சார வாகனம் வாங்கப்பட்டு, அந்த வாகனம் மக்களை கவரும் விதமாக வடிவமைப்பும் செய்யப்பட்டது. மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அருண் தலைமையில், மயிலை குமார் வடிவமைப்பு பணிகளைச் செய்தார். திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர் சூர்யா, செயலாளர் ராஜேஷ், அருண், வீரா முத்து உள்ளிட்ட பல தோழர்கள் இந்த பணியை மேற்கொண்டனர்.**

இரண்டு நாட்கள் தொடர் பரப்புரைப் பயணத்தில் மக்கள் பங்களிப்பாக (கடைவீதி வசூலாக) ரூ.7400 அளித்துள்ளனர். கழக நூல்கள் 5500 ரூபாய் விற்பனை ஆனது.

**சேலம்:** 16.03.2025 கொளத்தூரில் மேட்டூர் டி.கே. ஆர்.இசைக் குழுவின் பகுத்தறிவுப் பாடல்களோடு எழுச்சியுடன் பரப்புரைப் பயணம் தொடங்கியது. தொடக்கக் கூட்டத்திற்கு திராவிடர் விடுதலைக் கழக கொளத்தூர் நகரத் தலைவர் ராமமூர்த்தி தலைமை வகித்தார். திமுக கொளத்தூர் ஒன்றிய செயலாளர் மிதுன் சக்கரவர்த்தி மற்றும் கழக சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பரப்புரைப் பயணக் குழுவை சேலம் நாடாளுமன்ற உறுப்பினரும், திராவிட முன்னேற்றக் கழக சேலம் மேற்கு மாவட்ட செயலாளருமான திரு.டி.எம்.செல்வகணபதி அவர்கள் கொடி அசைத்து தொடங்கிவைத்து, உரை நிகழ்த்தினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் 'பெரியார் ஏன் எதிரிகளை பதற வைக்கிறார்' என்ற என்ற தலைப்பில் பரப்புரைப் பயண நோக்கத்தை விளக்கி உரையாற்றினார்.

முன்னதாக, திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் வழக்கறிஞர் சரவண பரத் அவர்கள் சிறப்புரையாற்றினார். இறுதியாக கொளத்தூர் நகரக் கழக செயலாளர் பா.அறிவுச்செல்வன் நன்றி தெரிவித்தார்.

மேட்டூர் பேருந்து நிலையம், நங்கவள்ளி, ஓமலூர் பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் முதல் நாள் பரப்புரை நடைபெற்றது. கழகத்தின்மேட்டூர் நகரத் தலைவர் மார்ட்டின், நங்கவள்ளி நகரச் செயலாளர் அ.செ.சந்திரசேகரன், சிந்தாமணியூர் நகரச் செயலாளர் ரவி ஆகியோர் தலைமை வகித்தனர்.

நகரச் செயலாளர் குமரப்பா, மாவட்ட இளைஞர் அணி செயலாளர் பிரபாகரன், கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட், கிழக்கு மாவட்ட தலைவர் சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராசு, தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன், தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல், சேலம் மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, திராவிட முன்னேற்றக் கழக காடையாம்பட்டி ஒன்றிய செயலாளர் அறிவழகன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

தோழர்கள் அனைவருக்கும் மதிய உணவு மாவட்ட பொருளாளர் சம்பத் அவர்களால் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்பு மற்றும் ராஜேந்திரன் அனைவருக்கும் பழச்சாறு வழங்கினார்கள்.

தோழர்களுக்கு இரவு உணவை திராவிட முன்னேற்றக் கழக ஓமலூர் ஒன்றிய செயலாளர் ரமேஷ் அவர்கள் வழங்கினார். இறுதியாக நங்கவள்ளி ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன், சிந்தாமணியூர் நகர தலைவர் ஜெய பிரகாஷ் , ஆகியோர் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஓமலூர் ஒன்றிய செயலாளர் ரமேஷ், ஓமலூர் பேரூர் கழகச் செயலாளர் ரவிச்சந்திரன், பேரூர் கவுன்சிலர் பிரகாஷ், மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் ரமேஷ், பேரூர் துணைச் செயலாளர் லியாகத் அலி, சீனி மீரான், சேட்டு ஆகிய தோழமை இயக்கத் தோழர்கள் கலந்து கொண்டனர். அனைத்து இடங்களிலும் மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின் பறை இசை மற்றும் பகுத்தறிவு பாடல்களுடன் நிகழ்ச்சி நடைபெற்றது.

(தொடர்ச்சி 4வது பக்கம்)













## மயிலாடுதுறையில் திரள்வோம்!

தமிழ்நாட்டில் காலூன்றத் துடிக்கும் பார்ப்பனிய மதவாத சக்திகள் தமிழ்நாட்டில் இருந்து பெரியாரைக் அகற்றினால் தான் காலூன்ற முடியும் என்ற முடிவுக்கு வந்து விட்டனர். இதற்காக சதித்திட்டம் அரங்கேற்றப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஆளுநர் பெரியாரை எதிர்த்துப் பேசுகிறார், ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் பெரியார் மீது அவதூறுகளை பேசுகிறார், தொலைக்காட்சி விவாதங்களில் பங்கேற்கும் சங்கிகள் ஒவ்வொரு நாளும் அவதூறுகளை வீசுகின்றனர்.

இதற்காக நாம் தமிழர் கட்சியின் சீமான் சங்கிகளின் கைப்பாவையாக களம் இறக்கப்பட்டுள்ளார். பெரியார் எதிர்நீச்சலில் வளர்ந்த தலைவர்; இந்த எதிர்ப்புகள் பெரியார் கருத்துக்களை மேலும் வலிமைப்படுத்தவே செய்யும் அதற்கான களங்களை பெரியாரியத் தொண்டர்களாகிய நாம் உருவாக்க வேண்டும். இந்த வரலாற்றுக் கடமையை முன்னெடுக்கவே இந்த பரப்புரைப் பயணத்தைத் தொடங்கி உள்ளோம். இதன் நிறைவு மாநாடு மயிலாடுதுறையில் மார்ச் 22 -ல் நிகழ இருக்கிறது. எதிரிகளைச் சந்திக்கும் அடுத்தகட்ட நடவடிக்கைகளை இந்த மாநாட்டில் நாம் முடிவெடுப்போம். பெரியாரியலுக்கு எதிராக எழுந்துள்ள சவால்களை சந்திக்க வேண்டியது நம் வெவ்வெருவரின் இலட்சியக் கடமை என்ற உணர்வோடு மயிலாடுதுறை மாநாட்டிற்குப் பெரும் திரளாக திரண்டு வருமாறு தோழர்களையும், உணர்வாளர்களையும் கேட்டுக் கொள்கிறோம். மயிலாடுதுறை **கருஞ்சட்டைக் கடலாகட்டும்! திரளுங்கள் தோழர்களே!**

**கொளத்தூர் மணி, தலைவர்**
**விடுதலை இராசேந்திரன், பொதுச்செயலாளர்.**
**திராவிடர் விடுதலைக் கழகம்**

## தலையங்கம்

# வளர்ச்சி பாதையில் தமிழ்நாடு!

**எதிர்வரும் சட்டமன்ற தேர்தலில் வாக்காளர்களைக் கவரக்கூடிய அம்சங்களை உள்ளடக்கியதாக தமிழ்நாடு நிதிநிலை இருக்கும் என்று ஊடகங்கள் பேசின. ஆனால் தமிழ்நாட்டின் கட்டமைப்பு வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுத்து தமிழ்நாடு அமைச்சர் தங்கம் தென்னரசு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார்.**

**வாக்குகளை விட தமிழ்நாட்டின் ஒருங்கிணைந்த வளர்ச்சிதான் முக்கியம் என்ற கவலையோடு தமிழ்நாடு அரசு செயல்படுகிறது என்பதையே இந்த நிதி நிலை அறிக்கை உணர்த்துகிறது. தலைசிறந்த பொருளாதார நிபுணர்களையும் விளிம்புநிலை மக்களையும் கலந்து ஆலோசித்து சர்வதேச அளவில் வெற்றியடைந்த திட்டங்களைக் கண்டறிந்து அவற்றை தமிழ்நாட்டுச் சூழலுக்கு ஏற்ப வடிவமைத்து பல மாதங்கள் தீவிர ஆலோசனைக்கு பிறகு இந்த பட்ஜெட் உருவாக்கபட்டு இருக்கிறது என்று தமிழ்நாடு முதல்வர் விளக்கம் தந்துள்ளார்.**

**நிதி நிலை அறிக்கையில் கல்விக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத்தான் பெரியார் கவலையோடு கவனிப்பார். திராவிட இயக்கத்தின் அந்த கொள்கையின் பார்வையில் நின்று கல்விக்கு மட்டும் ரூ.55,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

**ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக் கல்விக்கு தரவேண்டிய 2,152 கோடி ரூபாயை நிறுத்தி வைத்துள்ளது. மும்மொழித் திட்டத்தை நிறைவேற்றினால்தான் தருவோம் என்று மிரட்டுகிறது. இந்த நிலையில் அந்த நிதியை மாநில அரசே ஏற்கும் என்ற அறிவிப்பு தமிழ்நாடு அரசின் கொள்கை உறுதிக்குச் சான்றாகும்.**

**மொழிக் கொள்கையைத் திணிப்பதற்கு, நிதியை நிபந்தனையாக வைக்கின்ற அணுகுமுறை வெட்கக்கேடானது. மும்மொழித் திணிப்புக்குப் பதிலடியாக மற்றொரு அறிவிப்பையும் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. ரூபாயைக் குறிக்கிற தேவநாகரி எழுத்துக்களை மறுத்து, தமிழ் எழுத்தான 'ரூ'-வை பட்ஜெட்டில் சின்னமாகப் பயன்படுத்தி இருக்கிறது.**

**"ரூபாய்க்கு பயன்படுத்தப்பட்ட தேவநாகரி எழுத்தைத் தவிர்த்து 'ரூ' என்ற தமிழ்ச்சொல்லை முதல்வர் அறிமுகப்படுத்தி இருக்கிறார்". இந்த அறிவிப்பு வெளியான அதே நாளில்தான் 1975 மார்ச் 13-ஆம் நாள் முதல்வராக இருந்த கலைஞர் வெளியிட்ட ஒரு அறிவிப்பை அன்றைய ஒன்றிய அரசு மறுத்திருக்கிறது என்ற வரலாற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். தேசியக்கொடிக்குப் பதிலாக தமிழ்நாட்டிற்கு தனிக்கொடி வேண்டும் என்று முதல்வர் கலைஞர் திட்டமிட்டார். மாநில காவல்துறைத் தலைமை அலுவலகத்தில் தேசியக் கொடிக்குப் பதிலாக, மாநில அரசின் சின்னம் பொறிக்கப்பட்ட கொடி ஏற்றப்பட்டது. காவல்துறை அதிகாரிகள் பயன்படுத்தும் வாகனங்களிலும் இந்த புதிய கொடி பறந்தது.**

**அன்றைய காங்கிரஸ் ஆட்சி இதை ஏற்க முடியாது, மாநிலங்கள் தனிக்கொடியை பயன்படுத்தக் கூடாது என்று உள்துறை அமைச்சகம் வழியாக எதிர்ப்பை தெரிவித்ததும் இதே மார்ச் 13ம் நாளில்தான். மாநில உரிமைக்காக திராவிட இயக்கம் தொடர்ந்து குரல் கொடுக்கிறது.**

**1967-இல் அண்ணா முதலமைச்சர் ஆனவுடன் அரசு இலச்சினையில் இருந்த "சத்திய மேவே ஜெயதே" என்ற சொற்றொடரை நீக்கிவிட்டு "வாய்மையே வெல்லும்" என்ற தமிழ்ச் சொல்லை புகுத்தினார். அதுவரை அரசு ஆவணங்களில் பயன்படுத்தி வந்த ஸ்ரீ, ஸ்ரீமதி என்ற வடமொழிச் சொற்கள் நீக்கப்பட்டு திரு, திருமதி என்ற அழகிய தமிழ் மொழிச் சொற்கள் அறிமுகப்படுத்தப்பட்டன என்பது வரலாறு.**

**சமூக நீதிப் பார்வையில் பல்வேறு திட்டங்கள் நிதிநிலைக் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன. மகளிர்க்கு தோழி விடுதிகள், மூத்த குடிமக்களுக்கு அன்புச் சோலை மையங்கள், திருநங்கைகள் உயர்கல்விக்கு மாதம் ஆயிரம் ரூபாய், பெண்கள் பெயரில் சொத்துக்களைப் பதிவு செய்தால் 1% வரிச்சலுகை, சமூக நல்லிணக்கம் பேணும் கிராமங்களுக்கு ஒரு கோடி பரிசு, 1 லட்சம் மாணவர்களுக்கு 2,500 கோடி கல்விக்கடன், சென்னையில் 100 கோடியில் அறிவியல் மையம், முகாம்களில் வாழும் இலங்கை தமிழர்களுக்கு கூடுதலாக 3,000 வீடுகள், பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு மாதம் 2000 ரூபாய், சத்துணவு ஊழியர்கள் பணி நியமனத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு 4% இட ஒதுக்கீடு, ஊர்க்காவல் படையில் 50 திருநங்கைகள் நியமனம், 45 மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்பு, சுய உதவிக் குழு பெண்கள் தயாரிக்கும் பொருட்களை கொண்டுச் செல்ல பேருந்துகளில் கட்டணமில்லா சேவை. 20 இலட்சம் மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி என்று அடுக்கடுக்கான சமூகநீதித் திட்டங்களை திராவிட மாடல் ஆட்சி அறிவித்துள்ளது.**

**காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்ட வேண்டும். 'அனைவரையும் உள்ளடக்கிய சமூக பொருளாதார நீதியே திராவிட மாடல்' என்பதை மீண்டும் உறுதிப்படுத்தி இருக்கிறது இந்த நிதிநிலை அறிக்கை.**

# மோடி யார்? உண்மைகளை உடைக்கும் Grok!

*கடந்த சில வாரங்களாக இந்திய இணைய உலகை கலக்கிக் கொண்டிருக்கிறது எக்ஸ் சமூக ஊடகத்தின் ஏ.ஐ. எனப்படும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பமான Grok. இந்த ஏ.ஐ. இந்த தளத்தில் கேள்விகள் எழுப்பினால் இணையத்தில் கொட்டிக் கிடக்கும் தரவுகளின் அடிப்படையில், பகுத்தறிந்து சரியான பதிலைத் தர முயற்சிக்கிறது.*

*எக்ஸ் தள பயனாளிகள் மிகுந்த ஆர்வத்தோடு @Grok என டைப் செய்து, கேள்விகளை எழுப்பி பதில்களைப் பெற்று சோதித்துப் பார்க்கின்றனர். சேட் ஜிபிடி போன்ற இதற்கு முந்தைய செயற்கை நுண்ணறிவுத் தளங்களைக் காட்டிலும், கூடுதல் துல்லியமான பதிலைத் தருகிறது Grok. அது இணைய பயன்பாட்டாளர்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் பாஜக, சங் பரிவார்களுக்கு மட்டும் இந்த பதில்கள் சோகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.*

*நேர்மையான தலைவர் யார்? மோடியா? ராகுல் காந்தியா? என Grok-யிடம் கேள்வி எழுப்பினால், தரவுகளை ஆராய்ந்து மோடியை விட ராகுல் நேர்மையானவர் என பதில் தருகிறது. ராகுல் காந்தி உண்மையிலேயே ஹார்வர்டு மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களில் படித்து பட்டம் பெற்றவர். ஆனால் மோடி பெற்றதாகச் சொல்லப்படும் பட்டம் குறித்த தகவல்கள் அரைகுறையாக உள்ளன என்று உண்மையைப் புட்டுப் புட்டு வைக்கிறது Grok.*

*"இந்தியாவின் உண்மையான தலைவலி அமலாக்கத்துறையும், சிபிஐ-யும்தான், நான் ஒரு செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் என்பதால் ரெய்டுக்கு அஞ்சத் தேவையில்லை" என்ற பதிலைத் தந்திருக்கிறது Grok. விசாரணை அமைப்புகளை பாஜக எப்படிப் பயன்படுத்துகிறது என்பதை ஏ.ஐ. கூட உணர்ந்திருக்கிறது.*

*வெறுப்புப் பேச்சு தொடர்பாக இந்தியில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு, "மோடி, அமித் ஷா, ஆதித்யநாத், கிரிராஜ் சிங் போன்றோர் அதிக அளவில் வெறுப்புப் பேச்சுக்களை பேசும் அரசியல்வாதிகளான உள்ளனர். ஆனால் இவர்கள் தண்டிக்கப்படுவது அரிதினும் அரிது. சுதர்ஷன் நியூஸ், ரிபப்ளிக் டிவி, டைம்ஸ் நவ் போன்ற தொலைக்காட்சிகள் ஒருசார்பான செய்திகளை வெளியிட்டு சமூகப் பதற்றத்தை அதிகரிக்கச் செய்கின்றன. 2024-இல் வெறுப்புப் பேச்சுக்கள் 74% அதிகரித்திருக்கிறது. அவை பெரும்பாலும் இசுலாமியர்களுக்கு எதிராகவே உள்ளன" என்று பதிலளித்திருக்கிறது.*

*அதுமட்டுமல்ல, இந்தியாவில் ஜாதிப் பாகுபாடுகளை கடைபிடிப்பது யார் என்று கேள்வி எழுப்பினால் பார்ப்பனர்கள்தான் முதலிடத்தில் இருப்பதாகத் துல்லியமாகப் பதில் தருகிறது.*

*ஏற்கெனவே கூகுள் ஏ.ஐ. தொழில்நுட்பம் மோடியை ஒரு 'பாசிஸ்ட்' என்று பதிலளித்ததற்காக, கூகுள் நிறுவனம் இந்திய தகவல் தொழில்நுட்ப விதிகளை மீறுகிறது என்று கண்டித்தது ஒன்றிய அரசு. கூகுள் நிறுவனம் மன்னிப்பு கேட்கும் அளவுக்கு மிரட்டலை எதிர்கொண்டது. ஆனால் எக்ஸ் தளம் எலான் மஸ்க்கின் நிறுவனம் என்பதாலோ என்னவோ ஒன்றிய அரசின் தரப்பில் இருந்து இதுவரை பெரிதாக கண்டனங்கள் எதுவும் வெளிப்படவில்லை.*


## புரட்சிப் பெரியார் முழக்கம்

**ஆண்டு சந்தா : ரூ.300/-**

**ஐந்தாண்டு சந்தா : ரூ.1500/-**

**தொடர்புக்கு : 15. தோழமை, வெங்கடேஸ்வரா நகர், பெருங்குடி, சென்னை - 600096.**

**பேச : 63697 76351.**


# உயிரிழப்புகளை மறைக்கிறது ஒன்றிய அரசு?

*உத்தரப் பிரதேசத்தில் ஜனவரி 13-ஆம் தேதி தொடங்கி பிப்ரவரி 26-ஆம் தேதி வரை நடைபெற்ற கும்ப மேளாவில் 66 கோடி பேர் திரண்டதாகவும், உலகின் மிகப்பெரிய ஆன்மீகத் திருவிழா இதுதான், இதற்கு ஈடாக மக்கள் கூடிய இன்னொரு கொண்டாட்டத்தை காட்ட முடியுமா என்றும் சங்கிகள் பெருமிதம் தெரிவிக்கின்றனர்.*

*ஆனால் 66 கோடி பேர் என்று சங்கிகள் கூறுவது வாய்க்கு வந்ததை அள்ளிவிடும் கட்டுக்கதை என்று ஊடகங்கள் அம்பலப்படுத்திக்கொண்டிருக்கின்றன. ஏனெனில் கும்பமேளா நடைபெற்ற பிரயாக்ராஜிற்கு விமானத்தில் சென்றவர்கள் எண்ணிக்கை 5.6 லட்சம் பேர். ரயிலில் சென்றவர்கள் எண்ணிக்கை 4.24 கோடி பேர். அரசுப் பேருந்துகளில் சென்றவர்கள் 3.25 கோடி பேர். தனியார் பேருந்துகளில் சென்றவர்கள் 2.7 கோடி பேர். ஒட்டுமொத்தமாக சேர்த்தால் 10.25 கோடி பேர்தான் ரயில்கள், விமானங்கள், பேருந்துகள் மூலம் சென்றிருப்பார்கள்.*

*இதில் கார்கள், இருசக்கர வாகனங்களில் சென்றவர்கள் எண்ணிக்கை குறித்து எந்த கணக்கும் இல்லை. ஆனால் ரயிலில் சென்றவர்களை விடவோ, பேருந்துகளில் சென்றவர்களை விட கூடுதலாக எண்ணிக்கையில் கார்களிலும், பேருந்துகளிலும் சென்றிருக்க முடியாது என்பதுதான் எதார்த்தம். எனவே 66 கோடி பேர் கூடினார்கள் என்பது அப்பட்டமான பொய்.*

*உத்தரப் பிரதேசத்தில் வாழும் இந்துக்களின் எண்ணிக்கை மட்டுமே 16 கோடி. அவர்களே முழுமையாகச் செல்லவில்லை என்பதைத்தான் இந்த கணக்குகள் காட்டுகின்றன.*

*அதேபோல கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 30 என்கிறது ஒன்றிய அரசின் புள்ளி விவரங்கள். ஆனால் இதில் மூடிமறைக்கப்பட்ட உயிரிழப்புகள் இன்னும் இருக்கிறது என்பதே ஊடகங்கள் சொல்லும் செய்தி. குறைந்தபட்சமாக 69 பேர் வரை உயிரிழந்திருப்பதாக நியூஸ் லாண்டரி ஊடகம் காவல்துறை தரவுகளின் அடிப்படையில் செய்தி வெளியிட்டிருக்கிறது.*

# அரைகுறையாய் படித்துவிட்டு அவதூறு பரப்புவதா? பெரியாரை விமர்சிக்கும் அடிமுட்டாள்கள்!

–கொளத்தூர் மணி

*(சென்னையில் பிப்ரவரி 2-ஆம் தேதி நடைபெற்ற நிமிர்வோம் வாசகர் வட்ட நிகழ்ச்சியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரையின் தொடர்ச்சி)*

பெரியார் ஆங்கிலம் படிக்கச் சொன்னார். தேவநேயப் பாவணரும், பாவலர் பெருஞ்சித்திரனாரும் சேர்ந்து ஆங்கிலமும் தமிழும் படிக்க வேண்டும் என்று சொன்னவர்கள்தான். ஆராய்ச்சிப் படிப்புகள் வரைக்கும் தமிழில் படிக்க வேண்டும் என்ற குரலும் அப்போதே ஒலிக்கத் தொடங்கியது. “தமிழில் சொற்களே இல்லை, தமிழில் எப்படி ஆராய்ச்சி படிப்புகளை படிக்க முடியும்?” ஆனால் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். தமிழ்வழிக் கல்வி மாநாட்டில் பேசும்போது தொடக்கக் கல்வியை தாய்மொழியில் கற்க வேண்டும் என்று சொல்லுவேன்.

உடனே மணியரசன் போன்றவர்கள், மணி தமிழர் இல்லை, தமிழருக்கு பெருமிதம் இல்லை என்று வசைபாடுவார்கள். அடுத்தக் கூட்டத்தில் நான் சொன்னேன், “தமிழர்களுக்கு பெருமிதமான வரலாறே இல்லை; அடிமை வரலாறு, சூத்திர வரலாறுதானே நமக்கு எல்லாம். அழகான தமிழ்ப்பெயர் அருண்மொழிவர்மன் என்பதை ராஜராஜ சோழன் என்ற வடமொழி பெயராக மாற்றிக் கொண்டவர்.அவரை இந்த தமிழ்க் கம்பெனிகள் எல்லாம் சிறந்த தமிழர் என பட்டம் கொடுப்பார்கள், பாராட்டுவார்கள். நாங்கள் ஏதாவது விமர்சனம் செய்தால் எங்களை தமிழர் இல்லை என்பார்கள்” என்றேன்.

ஆனால் தமிழர்களுக்கு பெருமிதமான வரலாற்றைப் படைக்க வேண்டும் என்று வந்தவர்கள்தான் பெரியாரும், அண்ணாவும். பெருமிதம் என்பது பிதற்றிக் கொள்வது அல்ல. மற்றவர்கள் நம்மைப் பார்த்து பெருமை கொள்கிற உயர்ந்த நிலை நமக்கு வரவேண்டும் என்று விரும்பியவர்கள்.

## எழுத்துச் சீர்திருத்தம்

தஞ்சை தமிழன், குத்தூசி குருசாமிதான் எழுத்துச் சீர்திருத்தத்தை செய்தார் என்று மணியரசன் போன்றவர்கள் சொல்வார்கள். அதாவது பெரியார் செய்யவில்லை, கன்னடர் செய்யவில்லை, இவர்கள்தான் செய்தார்கள் என்று மார்தட்டிக் கொள்வார்கள். ஆனால் பெரியார் எதையும் மறைத்துக் கொண்டதில்லை, ஆ.சி. சுப்பையா என்ற ஒருவர் சிங்கப்பூரில் இருந்தார்.“சுந்தரமூர்த்தி நாயனார் கிரிமினல் கேஸ்” என்ற எல்லா புராணங்களில் உள்ள பொய்மைகளை அம்பலப்படுத்தி எழுதியவர். அவர் எழுத்து சீர்திருத்தம் பற்றிய ஒரு புத்தகத்தை எழுதுகிறார்.

அதைப் பார்த்து தெரிந்த பெரியார், ஈரோட்டில் சுயமரியாதைக் கழகத்தின் சார்பாக மறு வெளியீடு செய்கிறார். 1931-இல் இருந்து ‘முன்னேற்றம்’ இதழில் தொடர்ச்சியாக எழுதி வந்த கட்டுரையை நாங்கள் மறு வெளியீடு செய்கிறோம் என்றுதான் பெரியார் அந்த புத்தகத்தை வெளியிட்டார். அதேபோல் குத்தூசி குருசாமி முன்மொழிந்த தீர்மானம் அனைத்தும் குடியரசில் பதிவாகி இருக்கிறது. தமிழன்பர் மாநாடு பார்ப்பனர்கள் சேர்ந்து இந்த மாநாட்டை நடத்துகிறார்கள். ஐயங்கார், ஐயர் வகையறாக்கள், சில அனுமான்கள் இருந்திருப்பார்கள். தமிழர் என்று சொல்வதில் கூச்சம் இந்த பார்ப்பனக் கூட்டத்திற்கு.

அடுத்த மாநாடு துறையூரில் ‘தமிழர் மாநாடு’ என்ற தலைப்பில் நடத்துகிறார்கள். தமிழன் என்று சொன்னால் உள்ளே வந்து விடுவான் பார்ப்பான் என்ற எண்ணம் பெரியாருக்கு அப்போதுதான் வந்திருக்க வேண்டும். இந்த மாநாட்டில் தீர்மானம் கொடுக்கிறார்கள். ஒரு வேடிக்கையான தீர்மானம், குத்தூசி குருசாமி அவர்கள் எழுதி ஒரு தீர்மானத்தை கொடுக்கிறார். ‘தென்னாடுடைய சிவனே’ என்று எழுதி இந்தியாவிற்குள் பிரிவினையை உண்டாக்கும் சிவனை கண்டிக்கிறோம் என்றுகூட ஒரு தீர்மானத்தை முன்மொழிகிறார்கள்.

தமிழர் மாநாட்டில் எழுத்துச் சீர்திருத்தம் சம்பந்தமாக தீர்மானத்தைக் கொண்டு வருகிறார்கள். சாத்தான்குளம் ராகவன் ஒரு முன்னுரை எழுதுகிறார், பெரியார் 1934-இல் சிறையில் இருந்து வந்தபோது எழுத்து சீர்திருத்தம் பற்றி என்னிடம் கூறினார். கொம்பு லை, வை, துணைக்கால் போன்ற எழுத்துக்கள் மாற்றப்பட வேண்டும் என்று சொன்னார் பெரியார். உடனே ராகவன் சொன்னார் ஐ, வ், போன்ற எழுத்துக்களை அய், அவ் என மாற்றினால் நன்றாக இருக்கும் என்று சொன்னேன். உடனே பெரியார் நல்ல யோசனைதான் தொடக்கத்தில் இதை மட்டும் செய்யலாம் என்றார். உடனே அதையும் செய்தால் குழப்பம் ஏற்படுத்தும் என்றார் பெரியார்.

## எல்லாமே பெரியார் சொன்னதுதான்!

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தின் அமைச்சர் என்ற பெயரில் அந்த புத்தகம் வெளியிடப்பட்டது. இதையெல்லாம் பெரியார் மக்களிடம் வெளிப்படையாகவே சொன்னார். 1934-இல் ராகவன் சொன்னதையும் குத்தூசி குருசாமி கொண்டு வந்த தீர்மானத்தையும் பெரியார் மறைக்கவும் இல்லை, மறுக்கவும் இல்லை, நான்தான் செய்தேன் என்று எங்கேயும் சொல்லியதும் இல்லை. பெரியார் மீதான அத்தனை குற்றச்சாட்டுகளும் அவரே சொன்ன செய்திகள்தானே ஒழிய இவர்களெல்லாம் கண்டுபிடித்த செய்திகள் எதுவும் இல்லை.

பெரியார் மீதான விமர்சனங்களில் அவர் நிர்வாண சங்கத்தில் கலந்து கொண்டார் என்ற ஒரு விமர்சனம் உள்ளது. சோசலிஸ்ட் நடத்துற நிர்வாண சங்கத்திலும் கலந்து கொண்டார், பூஸ்வாக்கள் நடத்துகிற நிர்வாண சங்கத்திலும் கலந்து கொண்டார். என்ன வேறுபாடு இவர்கள் இருவருக்கும் என்று போய் பார்த்து, அதை அறிந்து கொண்டு வருகிறார். இவை அனைத்தையும் குடியரசில் படமாக வெளியிட்டும் இருக்கிறார். அவரே வெளியிட்ட செய்தியை வைத்துக்கொண்டுதான் இந்த விமர்சனத்தை வைக்கிறார்கள்.

காவிரி கரையில் மைனராக இருந்தார் என்றும் சொல்கிறார்கள். அதையும் பெரியார்தான் சொன்னார். நான் பொது வாழ்க்கைக்கு வரும் முன்னர் வாலிப வயதில் சகல இன்பங்களையும் அனுபவித்தவனாக இருந்தேன் என்று அவரே அவர் வாழ்க்கை வரலாறு எழுதியிருக்கிறார். இந்த விமர்சனம் வைக்கும் கயவர்கள் எதையாவது மறைத்ததைக் கண்டுபிடித்துச் சொன்னார்களா என்றால் இல்லை, பெரியாரே தன் மீதான அத்தனை விமர்சனத்திற்கும் பதிலையும் விமர்சனத்தையும் சொல்லி இருக்கிறார். அவற்றை எடுத்துதான் இப்போது இந்தக் கும்பல்கள் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். குறை சொல்வதற்குக் கூட ஒரு சின்ன ஆதாரம் இருந்தால் நன்றாக இருக்கும் என்று பார்ப்பார்கள், சுத்தமாக இருப்பதை மறைத்து உண்மைக்கு புறம்பாக எழுதுவதை இந்த கயவர்கள் கூட்டம் செய்து கொண்டிருக்கிறது.

## ‘திராவிட நாடு’ யாரெல்லாம் கேட்டனர்?

திராவிட நாடு கேட்பவர்கள் எல்லாம் தமிழர்கள் தான் என்று எப்போது சொல்லிக்கொண்டே இருப்பார்கள். ஆனால் முதன் முதலில் டி.எம் நாயர் நீதிக்கட்சியில் 1917 ஆண்டு நவம்பர் மாதம் தலையங்கம் ஒன்றை எழுதுகிறார். அதில் இந்த நாட்டில் சகோதர மொழிகளான தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளும் இறையாண்மைகளை அமைத்து *federation* ஆக வைப்போம். அதனால்தான் சவுத் இந்தியன் என்ற பெயரை சேர்த்து நாங்கள் அமைப்புக்கு வைத்துக் கொண்டோம் என்று ஒரு மலையாளி எழுதுகிறார்.



1926 மார்ச் சர். சங்கரன் நாயர் தனித்தமிழ்நாடு கேட்டார். 10 மாவட்டங்கள் தனியாக அமைத்து அஞ்சல், தந்தி, தரைப்படை, வான்படை, கடற்படை கொண்ட உரிமையுள்ள ஒரு நாடாக அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மத்திய சட்டமன்றத்தில் 1926 இல் முன்மொழிந்தார். பெரியார் திராவிட நாடு கேட்டார் பெரியார் பேசியது சென்னை மாகாணத்தை மட்டுமே. ஆனால் அண்ணா சொன்னார் மொழி வழி பிரிந்து, இன வழி கூடியிருக்கும் பிரிந்து செல்லும் உரிமையோடு கூடிய திராவிட சமதர்மக் கூட்டரசு என்றுதான் அண்ணா சொன்னார்.

## ஏவல் நாய்கள்!

பெரியார் அண்ணா மீது விமர்சனம் செய்பவர்கள் முழு செய்திகளைப் படிக்காமல் அரைகுறை செய்திகளைப் படித்துவிட்டு, அல்லது ஒற்றை வரியைத் தனியாக பிரித்தெடுத்துதான் ஆசான்களும் ஆசான்களுக்கு அடிமுட்டாள்களாக இருக்கும் தொண்டர்களும் செய்து கொண்டிருக்கிற கூச்சலில் தான் மீண்டும் பெரியாரைப் பற்றி அனைவரும் படிக்கிறார்கள்; தேடுகிறார்கள். ராஜாஜி எடுபிடியாக நான் உடைக்க முடியாத வியூகங்களை எல்லாம் அபிமன்யு போல் உடைத்துக் கொண்டு போய் தமிழர்களிடம் என் கருத்தை சேர்ப்பேன் என்று சொன்னார் ஏவல் நாயாக இருந்த ம.பொ.சி இருந்தார். இன்றைக்கு குருமூர்த்தி, கோபால் ஜி போன்றவர்கள் இன்னொரு ஏவல் நாயாக இன்றைக்கு இருக்கிற போலித் தமிழ்த் தேசியரைப் பயன்படுத்துகிறார்கள். இப்படி ஏவல் நாய்களாக இருந்து பழகிப்போன இந்த நாய்கள் தான் பெரியாரை இன்றைக்கு வேகமாக தேட வைத்திருக்கிறார்கள்

**(நிறைவு).**


## நூல் வெளியீடு !

## “ஆரிய மாடலா ? திராவிட மாடலா ?”

திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர் தோழர் “விடுதலை இராசேந்திரன்” அவர்களின் எழுத்தாக்கத்தில் கருத்து செறிவு மிகுந்த கட்டுரைகள்,வரலாற்று தகவல்கள், நிகழ்கால அரசியல் பார்வைகள்...... (கெட்டி அட்டையில்)

முன்பதிவு செய்வோருக்கு சலுகை விலையில் ரூ.300/–
(ரூபாய் முன்னூறு மட்டும்)
(தபால் செலவு ரூ.50 தனி)

“பெரியார் ஏன் எதிரிகளைப் பதற வைக்கிறார்?” பரப்புரைப் பயணத்தின் போது (மார்ச் 15 முதல் மார்ச் 22 முடிய) முன்பதிவு செய்யப்படும்.

**முன்பதிவிற்கு அலைபேசி எண் :**
94986 56683 – இந்த எண்ணில் GPay செய்து விட்டு வாட்ஸ் அப்பில் முன்பதிவு செய்யவும்.

பரப்புரைப் பயண நிறைவு விழா மாநாட்டில் சிறப்பு வெளியீடாக இந்நூல் வெளியிடப்படுகிறது. முன்பதிவு செய்வோருக்கு மாநாட்டு திடலில் புத்தகங்கள் வழங்கப்படும்.

நாள் : 22.03.25 சனி
நேரம் : மாலை 04.00 மணி
இடம் : சின்னக் கடைவீதி, மயிலாடுதுறை.

– நிமிர்வோம் வெளியீடு, 15.03.2025



date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

“பரபரப்பான விற்பனையில் !”
கழக நூல்கள் தொகுப்பு !

**அதிரடி சலுகை விலையில்!**
**14 புத்தகங்கள் - ரூ.565/ அதிரடி விலை குறைப்பு - ரூ.500/ மட்டும் (தபால் செலவு உட்பட) புத்தகங்களின் பட்டியல் :**

1. “அம்பேத்கர் நம் தலைவர்” - கொளத்தூர் மணி.
2. “இது தமிழ்நாடு சனாதனத்திற்கு எதிரான யுத்தம் இங்கு மட்டும் தான்” - உதயநிதி ஸ்டாலின்.
3. “இவர் தமிழர் இல்லை என்றால் எவர் தமிழர் நூல் அறிமுகம்” - விடுதலை இராசேந்திரன்.
4. “இறுதி மூச்சு அடங்கும் வரை யாருக்காக உழைத்தார் பெரியார்?” - திவிக வெளியீடு.
5. “ஈழ விடுதலையும் திராவிடர் இயக்கமும்” - கொளத்தூர் மணி.
6. “எங்களை தனிநாடு கேட்க வைத்து விடாதீர்கள்” - ஆ ராசா.
7. “எல்லைப் போராட்டத்தில் பெரியாரும், ம.பொ.சியும் “ - பெரியார்.
8. “தமிழர் உரிமைக்கு எதிரி யார்?” - பெரியார் மய்யம் .
9. “திராவிட பெரியார் யாருக்கு எதிரி” - விடுதலை இராசேந்திரன்.
10. “துப்பட்டா போடுங்கள் தோழி” - தோழர் கீதா.
11. “புராணங்களில்.... வரலாறுகளில்... பார்ப்பன பயங்கரவாதம்” - விடுதலை இராசேந்திரன்.
12. “பெரியாரின் மானுடம்” - நெ.து.சுந்திர வடிவேலு.
13. “பெரியாருக்கு எதிரான முனை மழுங்கும் வாதங்கள்” - கொளத்தூர் மணி.
14. “பெரியார் மீதான அவதூறுகளுக்கு மறுப்பு” - அமெரிக்க பெரியார் அம்பேபச்சத்கர் வாசகர் வட்டம்.

**புத்தகங்களின் மொத்த விலை ரூபாய் 565 / இணையம் மூலம் விற்பனை சலுகை விலை ரூபாய் 500 மட்டும் (தபால் செலவு உட்பட) புத்தகங்களைப் பெற 94986 56683 - இந்த எண்ணில் GPay செய்து விட்டு வாட்ஸ் அப்பில் முகவரியை பதிவு செய்யவும். புத்தகங்கள் அந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.**

**“பெரியார் ஏன் எதிரிகளை பதறவைக்கிறார்?” எனும் தலைப்பில் திராவிடர் விடுதலைக்கழகம் தமிழ்நாட்டின் 4 முனைகளிலிருந்து பரப்புரை பயணமாக புறப்பட்டு மார்ச் 22 மயிலாடுதுறையில் மாநாடாக நிறைவுபெறுகிறது.**

**இந்தப் பரப்புரைப் பயணத்தை ஒட்டி பெரியார் குறித்த உண்மை வரலாறு, திராவிடர் இயக்கம் செய்த சாதனைகள், பெரியார் குறித்த திட்டமிட்ட பொய் பரப்புரைகள், புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் எழுத்துக்கள் ஆகியவற்றின் தொகுப்பாக தனித்தனி தலைப்புகளில் புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.**

*வாங்குவீர்! படிப்பீர்! பரப்புவீர்!*
*- நிமிர்வோம் வெளியீடு, 17.03.25*

# பரப்புரையில் பல நெகிழ்ச்சி சம்பவங்கள்!!



சென்னை பரப்புரைக் குழு: கிழக்கு தாம்பரம் வால்மீகி நகரில் சங்கராச்சாரியார் படத்தை சட்டைப் பையில் வைத்திருந்த வெங்கடேஷ் என்ற புதிய ஆதரவாளர் பரப்புரை பயணத்தைக் கூர்ந்து கவனித்து கூட்டம் முடிந்ததும் தோழர்களுக்கு தேநீர் வாங்கி கொடுத்தார். மேலும், “நான் ஆன்மிகவாதிதான். ஆனால் பக்தி வேறு அரசியல் வேறு” என்றும், “எனக்குப் பெரியாரை பிடிக்கும். பெரியார் இல்லை என்றால் நான் இன்றைக்கு இந்த டிராவல்ஸ் தொழிலை வைத்திருக்க முடியாது” என உணர்ச்சி பொங்க கூறினார்.

“இன்றைக்கு சீமான் போன்ற ஆட்கள் பெரியாரைப் பற்றி அவதூறு பேசுவதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நீங்கள் இந்த மாறி அயோக்கியனை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துங்கள். பெரியார் இல்லை என்றால் இன்றைக்கு கல்வி கற்க முடியமா தமிழர்கள்” என்றும் கூறினார்.

அருகில் இருந்த பெட்ரோல் பங்கில் பரப்புரை வாகனத்திற்கு பெட்ரோலை கேனில் தர மறுத்தனர். வெங்கடேஷ் அவர்கள் சென்று கழகப் பிரச்சார ஜெனரேட்டர்க்கு 610 ரூபாய்க்கு பெட்ரோல் வாங்கிக் கொடுத்தார். தமிழ்நாட்டில் பக்திமானாக இருந்தாலும் அவர்கள் பெரியார் பற்றிய சரியான புரிதலோடு இருக்கிறார்கள் என்பதற்கு தாம்பரம் பகுதி வெங்கடேஷ் போன்றோர் நிகழ்கால உதாரணங்கள்.

தாம்பரம் பெரியார் மார்கெட்டில் நெற்றியில் குங்குமம் வைத்திருந்த பழக்கடைக்காரர் தோழர்களுக்கு பழத்தைக் கொடுத்துவிட்டு பெரியார் வாழ்க! என முழக்கமிட்டார். ‘எனக்கு பெரியார் பிடிக்கும்ப்பா’ என்று சொல்லி வாழ்த்தி அனுப்பினார்.

பூக்கடைக்கார அக்கா ஒருவர், “அய்யோ என்கிட்ட பணமில்லையே! பூ தரட்டுமானு என்றூ கேட்க, வேண்டாம் என்று தோழர்கள் கூறினர். “அதெப்படி சும்மா அனுப்புறது” என்று சொல்லிவிட்டு, அருகே இருந்த கடையில் 50 ரூபாய் வாங்கிக் கொடுத்து ஊக்கப்படுத்தி அனுப்பினார்.

ஈரோடு: பரப்புரைப் பயணத்தை உற்று கவனித்த ஒருவர், தோழர்கள் பேசி முடித்த பிறகு, “அப்படின்னா கண்டிப்பாக இட ஒதுக்கீடு வேணுமுங்க தம்பி. நான் கூட இத்தனை நாளா இட ஒதுக்கீட்டாலதான் ஜாதியே உயிரோடு இருக்குதுன்னு நினைச்சேன்” என்றார். பரப்புரைப் பயணத்தின் கருத்துக்கள் மிக ஆழமாக மக்களிடையே விதைக்கப்படுகிறது என்ற நம்பிக்கையை ஏற்படுத்திய இச்சம்பவம்.

கரூரைச் நவநீதகிருஷ்ணன் என்பவர் கழக கொள்கை பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் அவர்கள் முன்னிலையில் திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைந்தார். புதிய தோழருக்கு “இறுதி மூச்சு அடங்கும் வரை யாருக்காக உழைத்தார் பெரியார்” என்ற நூலை வழங்கி வரவேற்றார். “ஏற்கனவே பெரியார் கருத்துக்களைப் படித்துள்ளேன். பெரியாரைப் பிடிக்கும் ஆனால் நான் சாலையில் வரும்போது எனக்கு முன் சென்றவர் சுயமரியாதை நமது அடையாளம் என்ற வாசகத்துடன் டீ சர்ட் அணிந்திருந்தார். அதைப் பார்த்து, அவரை பின் தொடர்ந்து வந்து இணைந்து கொண்டேன்” என்று கூறினார்.

சேலம்: சேலம் மாவட்டம் கொளத்தூர், காவலாண்டியூர் கிராமத்தில் பனையேறும் தொழிலாளர்கள் பிரச்சாப் பயணக் குழுவை பாராட்டியும், தங்கள் சமுதாயத்திற்கு பெரியார் ஆற்றிய நன்றிக் கடனுக்காக ஒவ்வொரு வருடமும் பெரியார் இயக்கத்திற்காக உதவிகளை செய்து வருகிறோம், இனியும் செய்வோம் என தெரிவித்து ரூ.25,000-ஐ தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன் ஆகியோரிடம் வழங்கினார்கள். பத்திரிகையாளர் சிவசுப்ரமணியம் அவர்கள் 2000 ரூபாயும், இளம்பிள்ளை சதீஷ் குமார் அவர்கள் 1000 ரூபாயும் தன்னெழுச்சியாக வழங்கினர்.

திமுக தலைமைக் கழக பேச்சாளர் வெங்கடேஷ் தோழர்களுக்கு தங்கும் விடுதி, உணவு ஆகியவற்றை ஏற்பாடு செய்து கொடுத்தார். அவர் தொடர்ந்து பேசுகையில், “தான் சிறு வயதிலிருந்து திராவிடர் கழகத்தில் இருந்தவன். ஆகவே எனக்கு திராவிட இயக்கங்கள்தான் மிகவும் பிடிக்கும். நான் அரசியல் கட்சியான திமுகவில் இருந்தாலும் என்றும் தங்களின் ஆதரவாளராகவே இருப்பேன்” என்று பெருமையோடு கூறினார்.

சேலம் பேருந்து நிலையத்தில் கழகப் பரப்புரைக் கூட்டம் நடக்கும் போது, அங்கே கூட்டம் நடத்தக்கூடாது, நிறுத்த வேண்டும் என்று சங்கிகள் சிலர் சேலம் காவல் நிலையத்தில் முறையிட்டனர். காவலர்கள் வந்து தோழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அங்கு பிரச்சாரத்தை முடித்துவிட்டு, காவல் துறையினர் அனுமதி கொடுத்த இடத்திலும் பிரச்சாரத்தை நடத்தினர். உதவி ஆய்வாளர் பேசுகையில், உங்கள் பிரச்சாரம் தொடர்ந்து நடக்கட்டும் அதற்கு நாங்கள் உறுதுணையாகவே இருப்போம் என்று கூறி வழி அனுப்பினார். மேலும் முதலில் சிறிது கடுமையாக நடந்து கொண்ட காவல் உதவியாளர் தோழர்களிடம் என்னை மன்னித்து விடுங்கள் என்றும் கேட்டுக் கொண்டு விடை பெற்றார்.



முதல் பக்கம் தொடர்ச்சி...

பயணக் குழுவின் கடை வீதி வசூல் ரூ.8804 , புத்தக விற்பனை மொத்தம் ரூ. 1,245 (249 புத்தகங்கள் முதல் நாளில் விற்பனை ஆனது). கடை வீதி வசூலில் பெண் தோழர்கள் பெருமளவில் பங்கெடுத்தனர்.

**கள்ளக்குறிச்சி:** 16/03/2025 ஞாயிறு காலை 10 மணியளவில் மேல் சிறுவள்ளூர் கூட்ரோடு மும்முனை சந்திப்பில் விழுப்புரம் பயணக்குழுவின் பிரச்சாரம் தொடங்கியது. கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் க.ராமர் தலைமையில், விழுப்புரம் மாவட்ட தலைவர் பூ.ஆ .இளையரசன் முன்னிலையில் முதல் கூட்டம் நடைபெற்றது. கழகத்தின் பொருளாளர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிராபாகரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ந.அய்யனார், சூலுர் பன்னீர்செல்வம் ஆகியோர் பயண நோக்கத்தினை விளக்கி உரையாற்றினர்.

12 மணியளவில் தானிப்பாடி பகுதியிலும், மாலை 3 மணியளவில் தண்டராம்பட்டு எம்.ஜீ ஆர் சிலை அருகிலும், மாலை 6 மணியளவில் திருவண்ணாமலை காமராஜர் சிலை அருகிலும் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெற்றன. பயணத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் ந. அய்யனார் தொடர் சிறப்புரை நிகழ்த்தினார். மதியம் விசிக வை சார்ந்த தோழர் வெற்றிமுரசு தோழர்களுக்கு உணவு கொடுத்து மகிழ்ந்தார்.

**ஈரோடு:** 16-03-25 காலை 10 மணியளவில் பெரியார்- அண்ணா நினைவகத்தில் தொடக்க விழா நடைபெற்றது.பரப்புரைப் பயணத்தை மேயர் செல்வராஜ் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். கழக மாநில அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி தலைமை தாங்கினார். கழக வெளியீட்டுச் செயலாளர் இராம இளங்கோவன் சிறப்புரையாற்றினார்.

திருப்பூர், கோவை தோழர்கள் பயணத்தில் பங்கேற்றனர். திருப்பூர் மாவட்ட தலைவர் முகில்ராசு, மாநகர பொறுப்பாளர் முத்து ஆகியோர் குடும்பத்தோடு பங்கேற்றனர். கழக முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன், அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். விசிக ஈரோடு, திருப்பூர் மண்டல துணை தலைவர் ஜாபர் அலி, காங்கிரஸ் மாநகர மாவட்ட தலைவர் திருச்செல்வம், சமூகநீதிக் கூட்டமைப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் கண குறிஞ்சி உள்ளிட்ட தோழமை அமைப்பினர் கலந்து கொண்டனர். சாலையூர், கணபதிபாளையம், கருமாண்டம்பாளையம், ஒத்தக்கடை, கொடுமுடி என 5 இடங்களில் தெருமுனை கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் கோபி இராம இளங்கோவன், ஆசிரியர் சிவகாமி, பரிமளராசன், திருப்பூர் முத்து, இரத்தினசாமி, நிர்மல் குமார், செழியன் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள். பாலசுப்ரமணியம், எல்ஐசி கோவிந்தசாமி, ஹசன் திமுக உணவு வழங்கினர். கடைவீதி வசூலாக முதல் நாள் ரூ 2,900 பொதுமக்களால் வழங்கப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : March 21, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran